# KANYAKUMARI RURAL DEVELOPMENT SOCIETY
## THIRUPATHISARAM

## ACTIVITY PLANNER – 2020

| Sl. No. | WORK OF THE YEAR 2020 | Jan. | Feb | Mar. | April | May | June | July | Aug. | sep. | Oct. | Nov. | Dec. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல். | | | | | | | | | | | | |
| 2. | நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல். | | | | | | | | | | | | |
| 3. | ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல். | | | | | | | | | | | | |
| 4. | வங்கி முகவர்களை சந்தித்தல். | | | | | | | | | | | | |
| 5. | மருத்துவ முகாம்கள் நடத்துதல். | | | | | | | | | | | | |
| 6. | நன்கொடைகள் வசூலித்தல். | | | | | | | | | | | | |
| 7. | விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல். | | | | | | | | | | | | |
| 8. | விழாக்கள் கொண்டாடுதல். | | | | | | | | | | | | |
| 9. | CASE HISTORY எழுதுதல். | | | | | | | | | | | | |
| 10. | பெற்றோர் சங்க கூட்டங்களில் கலந்து கொள்ளுதல். | | | | | | | | | | | | |
| 11. | பணியாளர் கூட்டங்கள் நடத்துதல். | | | | | | | | | | | | |
| 12. | ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல். | | | | | | | | | | | | |
| 13. | மருத்துவ வசதி செய்து கொடுத்தல், ஆதரவற்ற மற்றும் மனநோயாளிகளை சந்தித்தல் | | | | | | | | | | | | |

Prepared by.

Anbaham-2019.

## 1. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்:

தினமும் ஒரு பணியாளர் குறைந்தபட்சம் ஒரு சிறப்பு இல்லத்தை உணவு வேளையில் பார்வையிடுதல்.

## 2. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்:

நமது சிறப்பு இல்லங்களில் ஆதரவற்ற மற்றும் பராமரிப்பு தேவைப்படும் மூளைவளர்ச்சி குன்றிய ஆண்கள், பெண்கள், முதியோர்கள், மனநோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள் பொது இடங்களிலோ, வீடுகளிலோ இருக்கும் நபர்களை கண்டறிந்து அவர்களை நமது இல்லங்களில் சேர்க்க ஏற்பாடு செய்யப்படும்.

| Name | Homes | Jan | Feb | Mar | Apr | May | June | July | Aug | Sep | Oct | Nov | Dec |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | SMR | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Selvi. | SPASTI | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Victoria | GSHA | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | AHMI | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | SMR | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Mrs. | SPASTI | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Viji | GSHA | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | AHMI | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Mrs. | SMR | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Sree | SPASTI | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Kala | GSHA | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | AHMI | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |

## 3. ஆதார் கார்டு வாங்குதல்:

ஒவ்வொரு மாதமும் நமது சிறப்பு இல்லங்களில் சேர்க்கப்படும் ஆதரவற்ற நபர்களுக்கு ஆதார் கார்டு எடுக்க நடவடிக்கை எடுத்து ஆதார் கார்டு வாங்கப்படும்.

## 4. வங்கி முகவர்களை சந்தித்தல்:

ஒவ்வொரு மாதமும் ஒரு வங்கி மேலாளரை சந்தித்து அவ்வங்கியின் வங்கி முகவரின் தகவல்களை கேட்டறிந்து அவ்முகவரின் மூலம் அவர்கள் உதவித்தொகை வழங்கும் ஆதரவற்ற நபர்களை பற்றிய தகவல்களை கேட்டறிந்து அவர்களை நமது இல்லங்களில் சேர்க்க ஏற்பாடு செய்யவும், நமது சிறப்பு இல்லங்களில் பணிபுரிய ஆர்வமுடைய நபர்களை கேட்டறியவும், நன்கொடைகள், உதவிகள் செய்யும் நபர்களை பற்றியும், வங்கி முகவர்கள் மூலம் கேட்டறியப்படும்.

செல்வி. விக்டோரியா - வாரம் ஒரு வங்கி முகவர்
திருமதி. விஜி - வாரம் ஒரு வங்கி முகவர்
திருமதி. ஸ்ரீகலா - வாரம் ஒரு வங்கி முகவர்

## 5. மருத்துவ முகாம்கள் நடத்துதல்:

நமது சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் செய்து கொடுக்க மருத்துவ முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

1. **மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி:**

   தோல் மருத்துவ முகாம் - பிப்ரவரி
   பொது மருத்துவ முகாம் - ஜீன், செப்டம்பர்.

2. **ஸ்பாஸ்டிக் சென்டர் ஆ·்ப் கன்னியாகுமரி:**

   மனநல மருத்துவ முகாம் - மே மாதம்
   தோல் மருத்துவ முகாம் - பிப்ரவரி
   கண் மருத்துவ முகாம் - ஜீலை
   பொது மருத்துவ முகாம் - ஆகஸ்டு, மார்ச்

3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:**

   பொது மருத்துவ முகாம் - மே, அக்டோபர்

கண் மருத்துவ முகாம் - டிசம்பர்

4. <u>**அன்பாலயா:**</u>

ஏப்ரல் - மனநல மருத்துவம்

அக்டோபர் - மனநல மருத்துவம்

மாதம் ஒருமுறை பொது மருத்துவ பரிசோதனை செய்தல்.

## 6. நன்கொடைகள் வசூலித்தல்:

அன்பியங்கள், குழுக்கள், மற்றும் உதவிகள் செய்யும் நபர்களை சந்தித்து பேசி நமது கார்டு நிறுவனத்தின் திட்டங்களை பற்றி கூறி நமது சிறப்பு இல்லங்களுக்கு தேவையான உதவிகளை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

## 7. விழிப்புணர்வு கருத்து கொடுத்தல்:

நமது சிறப்பு இல்லங்களை பார்வையிட வரும் குழுக்கள், நண்பர்கள், மதசார்பு குழுக்கள், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும், ஊனம் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களையும், 'கார்டு' நிறுவனத்தின் பணிகள் பற்றிய கருத்துக்களையும் விளக்கி சொல்லப்படும்.

ஆலயங்களில் உள்ள அன்பியங்கள், பெண்கள் சங்கங்கள், சுய உதவி குழுக்களுக்கு ஊனம் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களையும் 'கார்டு' நிறுவனத்தின் பணிகள் பற்றியும் விளக்கப்படும்.

## 8. விழாக்கள் கொண்டாடுதல்:

நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கு தேவையான உதவிகள் செய்து கொடுத்து விழாக்களில் கலந்து கொள்ளப்படும்.

### SMR:

ஜனவரி - பொங்கல் விழா, குடியரசு தின விழா

ஏப்ரல் - ஆண்டு விழா

ஆகஸ்ட் - சுதந்திர தின விழா

செப்டம்பர் - விளையாட்டு விழா

ஆகஸ்ட் - சரஸ்வதி பூஜை

நவம்பர் - கார்த்திகை தீபம்

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

**SPASTI:**

ஜனவரி - பொங்கல் விழா, குடியரசு தின விழா

ஏப்ரல் - ஆண்டு விழா

ஆகஸ்ட் - சுதந்திர தின விழா

அக்டோபர் - சரஸ்வதிபூஜை

நவம்பர் - கார்த்திகை தீபம்

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

**GSHA:**

ஜனவரி - பொங்கல் விழா

அக்டோபர் - சரஸ்வதிபூஜை

நவம்பர் - ஆண்டு விழா, முதியோர் தின விழா, கார்த்திகை தீபம்

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

**ANBALAYA:**

ஜனவரி - பொங்கல் விழா, குடியரசு தின விழா

ஆகஸ்ட் - சுதந்திர தின விழா, ஆண்டு விழா

அக்டோபர் - சரஸ்வதிபூஜை

நவம்பர் - கார்த்திகை தீபம்

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

## 9. CASE HISTORY:

நமது சிறப்பு இல்லங்களுக்கு புதிதாக வரும் நபர்களுக்கு அவர்களை பற்றிய முழு தகவல்களையும் எழுதி புகைப்படத்துடன் அவரவர் File-ல் சமர்பிக்கப்படும்.

## 10. பெற்றோர் சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் பெற்றோர் சங்கக் கூட்டங்களில் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளை பற்றிய தகவல்களை பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு தெரியபடுத்தப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| SMR | - | மே, நவம்பர் | - | முதல் ஞாயிறு |
| SPASTI | - | மார்ச், அக்டோபர் | - | முதல் ஞாயிறு |
| ANBALAYA | - | மார்ச், ஜீலை, நவம்பர் | - | முதல் ஞாயிறு |

## 11. பணியாளர் கூட்டம் மற்றும் பணிமதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

ஒவ்வொரு மாதமும் நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் பணியாளர் கூட்டங்களில் கலந்து கொண்டு நமது பணிகளில் ஏற்பட்ட சிரமங்கள், அதை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்று பகிர்ந்து கொண்டு திட்டமிட்ட பணிகளை சிறப்பாக செய்வதற்கு வழிமுறைகள் கூறப்படும். அத்துடன் அவர்தம் பணியினை சிறப்பாக செய்ய உதவிகள் செய்யப்படும்.

## 12. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

மாதந்தோறும் நடைபெறும் ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொண்டு திட்டமிட்ட பணிகளை செய்வதற்கு தேவையான வழிமுறைகளை கேட்டறியப்படும். திட்டப்பணிகளை சிறப்பாக செய்திடவும், திட்ட பணியாளர்களுக்கு பணிசிரமங்களை நிவர்த்தி செய்தி ஒருங்கிணைப்பாளர்கள் குழுவில் வழிமுறைகள் கேட்டறியப்படும்.

## 13. மருத்துவமனை செல்லுதல்:

நமது சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு தேவையான மாத்திரைகள் மாதந்தோறும் வாங்கவும், அரசு மருத்துவமனையில் ஆதரவற்ற நிலையிலும், பராமரிப்பு தேவைப்படும் நிலையிலும் தங்கியிருக்கக்கூடிய பெண்களை சந்தித்து, அவர்களை நமது இல்லங்களில் சேர்க்க சந்தித்து பேசவும், நமது இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் போது அவர்களையும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படும்.

திருப்பதிசாரம், துணை திட்ட அலுவலர்.

08-01-2020.

திட்ட அலுவலர்.

திட்ட இயக்குநர்.

# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம் திருப்பதிசாரம் - அஞ்சல்

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத்திட்டம்

## பணிகள் பற்றிய வருட அறிக்கை -2020

குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவுக்குட்பட்ட திருப்பதிசாரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 36 ஆண்டுகளாக பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறது. இதில் ஆதரவற்ற ஊனமுற்றோர், முதியோர், மனநோயினால் பாதிக்கப்பட்டோர் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் 2020-ம் ஆண்டு செய்த பணிகள் பற்றிய விரிவான அறிக்கை சமர்ப்பிக்கபடுகிறது.

### திட்டத்தின் நோக்கம்:

ஊனமுற்றவர்களின் நலனில் அக்கரை கொண்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுவதை தடுக்கவும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும், ஆதரவற்ற முதியோர்களை பராமரிக்கவும், ஆதரவற்ற மனநோயினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு கொடுத்து அவர்களும் சமுதாய மக்களோடு இணைந்து வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 1. மேற்கொண்ட திட்டங்கள்:

1. **மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மையம் –** திருப்பதிசாரம்.
2. **ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆப் கன்னியாகுமரி –** மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையம் - புளியடி, நாகர்கோவில்.
3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம் (பெண்கள்)** - ஆசாரிபள்ளம்.
4. **அன்பாலயா மனநோயாளிகள் இல்லம் (பெண்கள்) –** ஈத்தங்காடு, வெள்ளிச்சந்தை.
5. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுத் திட்டம்.

6. வளமேம்பாட்டுத்திட்டம்.

ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொண்ட பணிகள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது

## 2. மேற்கொண்ட பணிகள்:

1. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்.
2. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்.
3. ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல்.
4. வங்கி முகவர்களை சந்தித்தல்.
5. மருத்துவ முகாம்கள் நடத்துதல்
6. நன்கொடைகள் வசூலித்தல்.
7. விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்
8. விழாக்கள் கொண்டாடுதல்.
9. Case History எழுதுதல்.
10. பெற்றோர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
11. பணியாளர்கள் கூட்டம் நடத்துதல்.
12. ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்.
13. மருத்துவ வசதி செய்து கொடுத்தல், ஆதரவற்ற மற்றும் மனநோயாளிகளை சந்தித்தல்.

## 3. திட்டப்பணிகள் யார் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள், நிர்வாக பணியாளர்கள், விடுதி பணியாளர்கள் மற்றும் உதவி பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## 4. செய்து முடித்த பணிகள்:

### 1. சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்:

இந்த ஆண்டு திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள் சிறப்பு இல்லங்களை பார்வையிட்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு

இல்லத்தின் பணிகளையும், தங்கியிருக்கும் பயனாளிகளையும் கவனிக்கப் பட்டுள்ளது. சிறப்பு இல்லத்திற்கு வரும் பார்வையாளர்களிடம் நம்முடைய பணியின் நோக்கம் மற்றும் செயல்படுத்தும் பணிகளை பற்றி பேசப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஆதரவற்ற **மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்** 204 முறையும், **'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மையம்** 118 முறையும்,

**நல்ல சமாரியன் முதியோர் இல்லம்** 66 முறையும், **அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்** 64 முறையும் பார்வையிடப்பட்டுள்ளது.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை இவ்வருடம் தொழிற்பயிற்சி இல்லங்களை பார்வையிட்ட விபரம் தெரிவிக்கப்படுகிறது.**

| வ. எண் | சிறப்பு இல்லங்கள் | பார்வையிடப்பட்ட பணியாளர்கள் மற்றும் பார்வையிட்ட நாள்கள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | R. விக்டோரியா | J. ஸ்ரீகலா | C. விஜி | |
| 1. | SMR | 76 | 58 | 70 | 204 |
| 2. | SPASTI | - | 72 | 46 | 118 |
| 3. | GSHA | 36 | - | 30 | 66 |
| 4. | ANBALAYA | 38 | 26 | - | 64 |

## 2. நமது சிறப்பு இல்லங்களில் புதிய உறுப்பினர்களை சேர்த்தல்:

ஆதரவற்ற மனவளர்ச்சி குன்றியவர்களையும், சிறப்பு பயிற்சி, பராமரிப்பு தேவைப்படும் நபர்களையும், நமது சிறப்பு இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதியதாக இல்லங்களில் சேர்க்கப்பட்டவர்களின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## <u>மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:</u>

இந்த ஆண்டு ஆதரவற்ற மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்திற்கு செல்வி. கலா, திருமதி. மெல்டா அமல அரசி ஆகிய நபர்களையும், அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்திலிருந்து செல்வி. ரோகிணி, செல்வி எழில், செல்வி. ஜெயலெட்சுமி, செல்வி. மேரி செல்வி, செல்வி. அக்ஸலியா ரோஸ், செல்வி. பவானி, திருமிகு. செல்வி ஆகிய 9 நபர்களை புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது.

## <u>‘ஸ்பாஸ்டி’ மனவளர்ச்சி குன்றிய – ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:</u>

ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் செல்வன். காசிராஜன், செல்வன். சதீஷ், செல்வன். ரதீஷ், செல்வன். கணேசன், செல்வன். ராமர், செல்வன். பாலகிருஷ்ணன், செல்வன். சுந்தர், செல்வன். உதீஷ், செல்வன். அஜின், செல்வன். முத்துக்குமார், செல்வன். அருண்குமார், செல்வன். ரதீஷ்,

செல்வன். விஷ்ணு, செல்வன். சுராஜ், செல்வன். மணி, செல்வன். பாஸ்கர், செல்வன். மார்ட்டின், செல்வன். பிரவின், செல்வன். செம்புலிங்கம், செல்வன். R. பிரவின் ஆகிய 20 நபர்களை புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்டது.





## <u>நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:</u>

இந்த ஆண்டு அன்பாலயா இல்லத்தில் இருந்து செல்வி. முத்தம்மா என்பவரையும், திருமதி. செல்லம்மா, திருமதி. ராஜம், திருமதி. ஜெமிலா, திருமதி. சுப்பம்மா, திருமதி. முத்தம்மா, திருமதி. வள்ளியம்மா, திருமதி. மரிய புஷ்பம், திருமதி. றோஸ்லெட், திருமதி. பார்வதியம்மா, திருமதி. சொர்ணம்,
திருமதி. ராஜம்மாள், செல்வி. ரமணி, திருமதி. வல்சலா, திருமதி. விக்டோரியா ஆகிய 15 முதியோர்களை இல்லத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் இந்த ஆண்டு செல்வி. லைலா, திருமதி. சார்லெட், செல்வி. சிசிலி, செல்வி. ஹெப்சிபாய், திருமதி. புஷ்பா,
திருமதி. கீதா, திருமதி. ஸ்ரீதேவி, திருமதி. கோசலா, திருமதி. செல்வகுமாரி, திருமதி. ஜாய்தங்கம், திருமதி. ராணிலெட், செல்வி. வினோ, செல்வி. ஷீபா, திருமதி. தேன்மொழி, செல்வி. மஞ்சு, திருமதி. ஞானசெல்வி, திருமதி. செல்வி, திருமதி. ஜெபமலர் ஆகியோரையும் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்திலிருந்து செல்வி. முத்துலதாவையும் ஆகிய 19 நபர்களை அன்பாலயா இல்லத்தில் புதிதாக சேர்க்கப்பட்டது.





**இவ்வருடம் நமது சிறப்பு இல்லங்களில் புதியதாக சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | புதியதாக சேர்க்கப்பட்டநபர்கள் |
|---|---|---|
| 1. | SMR | 9 பேர் |
| 2. | SPASTI | 20 பேர் |
| 3. | GSHA | 15 பேர் |
| 4. | ANBALAYA | 19 பேர் |
| Total | | 63 பேர் |

## 3. வங்கி முகவர்களை சந்தித்தல்:

இவ்வருடம் 04-02-2020 அன்று பேயோடு வங்கி மேலாளர் திரு. கணேச மூர்த்தி அவர்களையும், சுங்கான்கடை சென்ட்ரல் வங்கி மேலாளரையும்,

07-02-2020 அன்று மணவாளக்குறிச்சி SBI வங்கி முகவர் திரு. சந்திரன் அவர்களையும், IOB வங்கி முகவர் திருமதி. ஜெயா அவர்களையும்,

14-02-2020 அன்று ஆசாரிபள்ளம் IOB வங்கி மேலாளரையும்,

18-02-2020 அன்று ஆசாரிபள்ளம் SBI வங்கி மேலாளரையும்,

19-02-2020 அன்று வெள்ளமோடி வங்கி மேலாளர் திரு. அனிஷ் அவர்களையும், வங்கி முகவர் திருமதி. கவிதா அவர்களையும்,

05-03-2020 அன்று குருந்தன்கோடு IOB வங்கி முகவர் திருமதி. பிந்து, திருமதி. சுபா ஆகியோரையும்,

18-08-2020 அன்று புத்தேரி IOB வங்கி மேலாளரையும், 22-09-2020 அன்று புத்தேரி IOB வங்கி ஊழியர் திருமதி. கிருஷ்ணவேணி, திருமதி. ராஜேஸ்வரி, திருமதி. சுருதி ஆகியோரையும், ஆசாரிபள்ளம் IOB வங்கி ஊழியர் திருமதி. குமாரி அவர்களையும்,

21-10-2020 அன்று மகாராஜபுரம் பஞ்சாயத்து IOB வங்கி முகவர் திருமதி. ராதாமணி அவர்களையும், இராமபுரம் IOB வங்கி முகவர் திருமதி. வனஜா அவர்களையும்,

10-11-2020 அன்று மார்த்தாண்டம் IOB வங்கி முகவர் திருமதி. ஷீஜா அவர்களையும் சந்தித்து நமது சிறப்பு இல்லங்கள் பற்றியும், இல்லத்தில் தங்கியிருக்கும் சிறப்பு மாணவ, மாணவிகள், முதியோர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்களை பற்றியும், அவர்களை பராமரிப்பது பற்றியும் பேசப்பட்டது.

29-11-2020 அன்று ஆசாரிபள்ளம் IOB வங்கி ஊழியர் திருமதி. குமாரி அவர்களையும் சந்தித்து பேசப்பட்டது.

## 4. மருத்துவ முகாம் நடத்துதல்:

### திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:

19-03-2020 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய தொழிற் பயிற்சி மைய மாணவிகளுக்கு பொன்னு தோல் மருத்துவ குழுவினரால் தோல் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் 25 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.





**<u>ஸ்பாஸ்டி தொழிற் பயிற்சி மையம்:</u>**



20-03-2020 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மைய மாணவர்களுக்கு பொன்னு தோல் மருத்துவமனை குழுவினரால் தோல் மருத்துவமுகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் 67 மாணவர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டது. அதில் தோல் நோய் பாதிப்பு இருந்த 8 மாணவர்கள் பயனடைந்தனர்.

**<u>நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:</u>**

06-01-2020 அன்று இடலாகுடி உகா சேவா மருத்துவமனையின் 10-வது ஆண்டு விழா சிறப்பு மருத்துவ முகாமில் நமது 14 முதியோர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் கொடுக்கப்பட்டது.



09-07-2020 அன்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை ஆயூர்வேதா பிரிவில் உள்ள டாக்டர். ஆன்றணி சுரேஷ்சிங் அவர்கள் நல்ல சமாரியன் முதியோர் இல்ல முதியோர்களை சந்தித்து கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளாக Indhukantha kasayam, Agasthiya Kasayam ஆகிய மருந்துகளை வழங்கி மருந்து சாப்பிடும் அளவையும் கூறினார்கள். இந்த முகாமில் அனைத்து முதியோர்களும் பயனடைந்தனர்.

20-08-020 அன்று தொல்லவிளை G.H. Staff மற்றும் DBC Workers எமது இல்லத்தில் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு கருத்துக்கள் கூறினார்கள். முதியோர்களுக்கு Corona Virus Sample Test எடுக்கப்பட்டது. இதில் 21 முதியோர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

20-10-2020 அன்று Dr. Rajan Mphil Phd, Hr. A.M. Arasu BEMS, MD (Acu) ஆகியோர் Magil Trust சார்பில் முதியோர் இல்லத்தில் வந்து Laughing Therophy

மற்றும் Counseling, Diabets Awareness Program நடத்தப்பட்டது. இந்த முகாமில் அனைத்து முதியோர்களும் பயனடைந்தனர்.





**<u>இந்த ஆண்டு நடைபெற்ற மருத்துவ முகாம்கள் விபரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.</u>**

| வ. எண் | சிறப்பு இல்லங்கள் | தேதி | நடைபெற்ற மருத்துவ முகாம்கள் | மருத்துவமுகாமில் கலந்துகொண்டவர்கள் |
|---|---|---|---|---|
| 1. | SMR | 19-03-2020 | தோல் மருத்துவ முகாம் | 25 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | SPASTI | 20-03-2020 | தோல் மருத்துவ முகாம் | 67 |
| 3. | GSHA | 06-01-2020 | பொது மருத்துவ முகாம் | 14 |
| 4. | ANBALAYA | - | - | - |
| | | 3 | 3 | 106 |

## 5. நன்கொடை வசூலித்தல்:

நமது சிறப்பு இல்லங்களில் தங்கி பயிற்சி பெற்று வரும் நபர்களுக்கு தேவையான உணவு, உடை, அனைத்தும் உள்ளுர் நன்கொடையாளரிடமிருந்து பணமாகவும், பொருளாகவும் வாங்கி நடத்தப்பட்டு வருகிறது.

**இந்த ஆண்டு நன்கொடை பெற்றதின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

ஸ்பாஸ்டி சிறப்பு தொழிற்பயிற்சி இல்லத்திற்கு இந்த ஆண்டு ஒருநேர உணவாக 577 நபர்களும், ஒருநாள் உணவாக 28 நபர்களும் கொடுத்து உதவி

செய்துள்ளார்கள். நன்கொடையாக இந்த ஆண்டு ரூ. 87,980/- கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழில் பயிற்சி இல்லம், திருப்பதிசாரத்திற்கு இந்த ஆண்டு ஒருவேளை உணவாக 1109 நபர்களும் ஒருநாள் உணவாக 14 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ.62,200/- கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

அன்பாலயா மனநோயாளிகள் மறுவாழ்வு இல்லத்திற்கு இந்த ஆண்டு ஒரு நேர உணவாக 234 நபர்களும், ஒருநாள் உணவாக 4 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ.45,600/- இந்த ஆண்டு கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம் இல்லத்திற்கு ஒருநேர உணவாக 292 நபர்களும், ஒருநாள் உணவாக 3 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ.51,200/- கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

**<u>இந்த ஆண்டு உணவு மற்றும் பணம் நன்கொடை விபரம் இல்லங்கள் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.</u>**

| வ. எண் | சிறப்பு இல்லங்கள் | ஒருநேர உணவாக வழங்கியவர்கள் | ஒருநாள் உணவாக வழங்கியவர்கள் | நன்கொடை Rs. |
|---|---|---|---|---|
| 1. | மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம் - திருப்பதிசாரம் | 1109 | 14 | 62,200/- |
| 2. | ‘ஸ்பாஸ்டி’ மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்- புளியடி | 577 | 28 | 87,980/- |
| 3. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம் | 292 | 3 | 51,200/- |
| 4. | அன்பாலயா மனநோயாளிகள் மறுவாழ்வு இல்லம். | 234 | 4 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 45,600/- |
| | | 2212 | 49 | 246980/- |

**<u>பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்:</u>**

**<u>மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம் - திருப்பதிசாரம்.</u>**

இந்த ஆண்டு மனவளர்ச்சி குன்றிய மாணவிகளுக்கு தேவையான நைட்டிகள், சுடிதார்கள், சோப்பு, பல்பொடி, கோதுமை மாவு, அரிசி, சேமியா, மளிகை பொருள்கள், உழுந்து, பயறு ஆகியவைகள் நன்கொடையாளர்கள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

**<u>'ஸ்பாஸ்டி' மனவளர்ச்சிகுன்றிய ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்-புளியடி</u>**

'ஸ்பாஸ்டி' மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற் பயிற்சி இல்லத்திற்கு சோப்பு, பல்பொடி, துணிகள், அரிசி, மளிகை, காய்கறிகள் மற்றும் சீனி, தேயிலை, முடிவெட்ட டிரிம்மர்-1, 26 பிளாஸ்டிக் செயர், ஒரு இன்வெட்டர் பேட்டரி, B.P Apparatus -1, ஆவிபிடிக்கும் கருவி -4, தெர்மாமீட்டர் -4, கப், தட்டு, ஜக், Cot water Bag -4 ஆகிய பொருள்கள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.





## <u>நல்ல சமாரியன் முதியோர் இல்லம் (பெண்கள்) - ஆசாரிபள்ளம்.</u>

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்திற்கு நைட்டி, சாரீஸ், சோப்பு, பல்பொடி, பிஸ்கெட், டெட்டால், அரிசி, மளிகை, டயாப்பர், குக்கர், ஸ்டவ், B.P Apparatus, Glucometer, Weighing Machine, Ceragem Bed ஆகிய பொருள்கள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

## <u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லம் - ஈத்தன்காடு.</u>

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்திற்கு நைட்டிகள், உள்ளாடைகள், குளிர்சாதனபெட்டி, தோசைக்கல், கட்டில், சலவை சோப், குளியல் சோப், உணவு பொருள்கள், தின்பண்டங்கள் ஆகிய பொருள்கள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

## <u>6. விழிப்புணர்வு கருத்து கொடுத்தல்:</u>

நமது சிறப்பு இல்லங்களை பார்வையிட வரும் தனிநபர்களுக்கும், குழுவாக வரும் குழுக்களுக்கும் குடும்பமாக வருபவர்களுக்கும் நமது நிறுவனத்தைப் பற்றியும், நிறுவனத்தின் கீழ் செயல்படும் சிறப்பு இல்லங்கள் பற்றியும், சிறப்பு இல்லங்களில் இருப்பவர்களை பராமரிக்கும் விதம் பற்றியும் உள்ளூர் நன்கொடையாளர்களிடம் உதவிகள் பெற்று நடத்தப்படுவது பற்றியும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பார்வையிட வந்த குழுக்களில் சிலவற்றை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## <u>மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் - திருப்பதிசாரம்:</u>

15-02-2020 அன்று அம்மாண்டிவிளை புனித ஜாண்ஸ் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும், 03-08-2020 அன்று புனித சவேரியார் ஆலயத்தின் 16, 17, 18-வது அன்பிய மக்களுக்கும், கோட்டாறு ஆயூர் வேதா மருத்துவ கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் மற்றும் இல்லத்தை பார்வையிட வந்த

குடும்பத்தினர்கள், நன்கொடையாளர்கள், பார்வையாளர்களுக்கும் நமது நிறுவனத்தை பற்றியும், நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சிறப்பு இல்லங்கள் பற்றியும், சிறப்பு இல்ல பெண்களை பராமரிப்பது மற்றும் இல்லத்தில் சேர்ப்பது பற்றியும் பொது மக்களின் ஒத்துழைப்போடும் உதவிகளோடும் செயல்பட்டு வருகிறது என்பதை பற்றி விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பிற்சி மையம்:

26-01-2020 அன்று CSI Church Meadpuram Women Fellow Ship சார்பில்
35 பெண்கள் பார்வையிட வந்துள்ளார்கள்.

21-02-20 CBH நாகர்கோவில் மருத்துவமனை Nursing மாணவ, மாணவிகள் 15 பேர் பார்வையிட வந்துள்ளார்கள்.

08-03-20 அன்று கிருஷ்ணன்கோயில் ஆதிபராசக்தி கோவில் பக்தர்கள்
45 பேர் பார்வையிட வந்துள்ளார்கள்.

13-03-20 அன்று குமரி மாவட்ட ஜவான்ஸ் அமைப்பினர் 25 பேர் பார்வையிட வந்துள்ளார்கள்.

15-03-20 அன்று நாகர்கோவில் அசிசி சர்ச் பரிகார மாதா பிரசீடிய உறுப்பினர்கள் 9 பேர் பார்வையிட வந்துள்ளார்கள்.

12-12-20 அன்று DMK கட்சி சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் பார்வையிட வந்துள்ளார்கள்.

24-12-20 அன்று வெட்டூர்ணிமடம் பகுதியை சேர்ந்த Arrow Sports & Welfare Trust சார்பில் உறுப்பினர்கள் பார்வையிட வந்துள்ளார்கள்.

25-12-20 அன்று மணவாளகுறிச்சி Yellow Trust சார்பில் 11 பேர் பார்வையிட வந்துள்ளார்கள் அவர்களுக்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:




13-01-2020 அன்று நாகர்கோவில் கிறிஸ்தவ கல்லூரி மாணவிகளுக்கும்,

15-02-2020 அன்று குமரி தென்றல் உறுப்பினர்களுக்கும்,

15-03-2020 அன்று சரல் ஆலய அந்தோணியார் அன்பிய மக்களுக்கும்,

25-08-20 அன்று தமுமுக மாவட்ட மருத்துவரணி நண்பர்களுக்கும்,

05-09-20 அன்று கன்னியாகுமரி ஜவான்ஸ் உறுப்பினர்களுக்கும்,

25-10-20 அன்று மெடிக்கல் ரெப் சேவா சங்க உறுப்பினர்களுக்கும்,

11-11-20 அன்று திருவிதாங்கோடு GHSS 1982-1987 Batch வாட்ஸ் அ.ஃ.ப் குழுவிற்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:</u>**

13-01-2020 அன்று WCC Department of History மாணவிகளும், பேராசிரியர்களும், 20-01-2020 அன்று ராமன்புதூர் குழந்தையேசு அன்பிய இறைமக்களும், 25-01-2020 அன்று WCC Deapartment of Zoology மாணவிகளும், 4 பேராசிரியர்களுக்கும்,

08-02-2020 அன்று தாழையன் கோணம் ஆலய மரியாயின் சேனை இறைமக்களுக்கும், 13-02-2020 அன்று குமரி மாவட்ட விசைப்படகு மீன்பிடிப்பவர் சங்க நிர்வாகிகளுக்கும், 16-02-2020 அன்று வழுதலம்பள்ளம் வீர சிவாஜி சேவா சங்க இளைஞர்களுக்கும், 22-02-2020 அன்று பாம்பன்விளை ஆலய பங்கு தந்தையை சந்தித்தும், 29-02-2020 அன்று பார்வதிபுரம் குழந்தை ஏசு ஆலய பங்கு தந்தையை சந்தித்தும்,

02-03-2020 அன்று கொன்னக்குழிவிளை பங்குதந்தை மற்றும் 08-03-2020 தாழையன் கோணம், ஒற்றையால் விளை ஆகிய ஆலயத்தில் உள்ள

பங்குதந்தையை சந்தித்தும், 15-03-2020 அன்று ராமன்புதூர் ஆலய மரியாயின் சேனை மக்களுக்கும்,

07-06-2020 அன்று பறக்கையை சேர்ந்த நண்பர்கள் சங்க குழுவினர்களுக்கும்,

17-08-2020 அன்று விடுதலை சிறுத்தை கட்சித்தலைவர் திரு. திருமாவளவன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு எமது இல்ல முதியோர்களுக்கு உணவளிக்க வந்த கட்சித் தொண்டர்களுக்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டது.

## 7. விழாக்கள் கொண்டாடுதல்:

### மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம்:

26-01-2020 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் கணக்காளர் திருமதி. அபிலா அவர்கள் தலைமையில் தேசியகொடி ஏற்றப்பட்டு குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

15-08-2020 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் உதவி திட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீகலா அவர்கள் தேசிய கொடியேற்றி விழாவை சிறப்பித்தார்கள்.

25-10-2020 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் சரஸ்வதி பூஜை விழா கொண்டாடப்பட்டது.



14-11-2020 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய

தொழிற்பயிற்சி மையத்தில்

தீபாவளி

பண்டிகையும், 29-11-2020 அன்று கார்த்திகை தீப விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

23-12-2020 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் திட்ட இயக்குநர் திரு. பேசில்ராஜன் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது.





**மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான பயிற்சி மையத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் தேதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 26-01-2020 | குடியரசு தினவிழா |
| 2. | 15-08-2020 | சுதந்திர தினவிழா |
| 3. | 25-10-2020 | சரஸ்வதி பூஜை விழா |
| 4. | 14-11-2020 | தீபாவளி |
| 5. | 29-11-2020 | கார்த்திகை தீப விழா |
| 6. | 23-12-2020 | கிறிஸ்மஸ் விழா |

## ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:




26-01-2020 அன்று ஸ்பாஸ்டி ஆண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் ரோட்டரி கிளப் ஆ.்.ப் குயின்ஸ் சார்பாக வந்து கலந்து கொண்டு தேசிய கொடியேற்றியும், வாழ்த்துரை வழங்கியும் சிறப்பித்தார்கள். மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் மகிழ்வித்தனர்.

15-08-2020 அன்று திட்ட அலுவலர் செல்வி. விக்டோரியா அவர்கள் தேசிய

கொடியேற்றி விழாவை சிறப்பித்தார்கள். 29-11-2020 அன்று மாலை திருகார்த்திகை

தீபம் ஏற்றி தீபவிழா கொண்டாடப்பட்டது.




23-12-2020 அன்று திட்ட இயக்குனர் அவர்கள் தலைமையில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளுடன் கிறிஸ்மஸ் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்:

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | 26-01-2020 | குடியரசு தினவிழா |
| 2. | 15-08-2020 | சுதந்திர தினவிழா |
| 4. | 29-11-2020 | திருக்கார்த்திகை தீப விழா |
| 5. | 23-12-2020 | கிறிஸ்மஸ் விழா |

**நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:**

15-01-2020 அன்று நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் வைத்து முதியோர்களால் பொங்கலிட்டு பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.




01-10-2020 அன்று திட்ட இயக்குனர் தலைமையில் முதியோர் தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

14-11-2020 அன்று முதியோர்களுக்கு அணிவித்து கிருஷ்ணன்கோயில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயில் சார்பாக காலை உணவு இனிப்புகளும் வழங்கி சிறப்பாக தீபாவளி திருநாள் கொண்டாடப்பட்டது.

29-11-2020 அன்று மாலை முதியோர்களால் கார்த்திகை தீபம் ஏற்றி தீபத்திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

24-12-2020 அன்று திட்ட இயக்குனர் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது.






**<u>நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்:</u>**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 15-01-2020 | பொங்கல் விழா |
| 2. | 01-10-2020 | முதியோர் தினவிழா |
| 3. | 14-11-2020 | தீபாவளி |
| 4. | 29-11-2020 | கார்த்திகை தீபத்திருநாள் |
| 5. | 17-12-2020 | கிறிஸ்மஸ் விழா |

**<u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:</u>**



26-01-2020 அன்று அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில்

திருமதி. விஜி அவர்களால் தேசிய

குடியரசு தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

15-08-2020 அன்று ஒருங்கிணைப்பாளர் திருமதி. விஜி அவர்களால் தேசிய கொடியேற்றி சுதந்திர தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது

14-11-2020 அன்று தீபாவளி பண்டிகையும், 29-11-2020 அன்று கார்த்திகை தீபவிழாவும் அன்பாலயா இல்ல பயனாளிகளால் சிறப்பாக கொண்டாடப்பட்டது.



**<u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் நடைபெற்ற விழாக்கள் தேதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.</u>**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 26-01-2020 | குடியரசு தின விழா |
| 2. | 15-08-2020 | சுதந்திர தினவிழா |
| 3. | 14-11-2020 | தீபாவளி |
| 4. | 29-11-2020 | கார்த்திகை தீபவிழா |

## 8. CASE HISTORY எழுதுதல்:

மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் உள்ள ஒரு நபருக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஸ்ரீகலா அவர்களால் Case History எழுதப்பட்டது.

ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் உள்ள 74 நபர்களுக்கு திட்ட அலுவலர் செல்வி. விக்டோரியா அவர்களால் Case History எழுதப்பட்டது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் 16 நபர்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஸ்ரீகலா அவர்களால் Case History எழுதப்பட்டது.

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் 18 நபர்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. விஜி அவர்களால் Case History எழுதப்பட்டது.

| **வ.எண்** | **சிறப்பு இல்லங்கள்** | **Case History** |
|---|---|---|
| 1. | SMR | 1 |
| 2. | SPASTI | 74 |
| 3. | GSHA | 16 |
| 4. | ANBALAYA | 18 |

## 9. பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டம் நடத்துதல்:

### மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி மையம்:

08-11-2020 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 9 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

### ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:

08-03-2020, 01-11-2020 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 37 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

08-03-2020 அன்று அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 9 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

15-11-2020 அன்று அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 12 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டங்களும், கலந்துகொண்ட பெற்றோர் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | சிறப்பு இல்லங்களின் பெயர்கள் | நடைபெற்ற பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டங்கள் | கலந்து கொண்ட பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | SMR | 1 | 9 |
| 2. | SPASTI | 2 | 37 |
| 3. | ANBALAYA | 2 | 21 |
| மொத்தம் | | 5 | 67 |

## 10. பணியாளர்கள் கூட்டம் நடத்துதல்:

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் 16-01-2020, 13-02-2020, 16-10-2020 ஆகிய தினங்களில் பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் 21-01-2020, 03-02-2020, 14-03-2020, 06-06-2020, 21-08-2020, 19-09-2020, 14-10-2020, 13-11-2020 ஆகிய தினங்களில் பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் 22-01-2020, 07-02-2020,

12-06-2020, 16-10-2020 ஆகிய நாட்களில் பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் 14-01-2020, 17-02-2020, 17-03-2020, 08-06-2020, 21-07-2020, 25-08-2020, 15-10-2020 ஆகிய தினங்களில்

பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.


**இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பணியாளர் கூட்டங்கள் பற்றிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்களின் பெயர் | நடைபெற்ற பணியாளர் கூட்டங்கள் |
|---|---|---|
| 1. | SMR | 3 |
| 2. | SPASTI | 8 |
| 3. | GSHA | 4 |
| 4. | ANBALAYA | 7 |
| மொத்தம் | | 22 |

**<u>11. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:</u>**

இவ்வருடம் மொத்தம் எட்டு ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டங்கள் நடைபெற்றது.

இக்கூட்டங்களில் கலந்து கொள்ளப்பட்டது.





## 12. மருத்துவ வசதி செய்து கொடுத்தல் மற்றும் ஆதரவற்ற மனநோயாளிகளை சந்தித்தல்:

### மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி மையம்:

02-01-2020, 17-01-2020, 18-02-2020, 26-02-2020 ஆகிய தினங்களில் செல்வி. சுனிதா, செல்வி. முத்துமாரி, செல்வி. ஆனந்த செல்வி ஆகியோரை தோல் நோய் காரணமாக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை அழைத்து செல்லப்பட்டது.

02-03-2020 அன்று செல்வி. ராஜகுமாரிக்கு வயிற்றுப்போக்கு காரணமாக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகள் பிரிவில் சேர்க்கப்பட்டு மருத்துவ ஆலோசனைபடி சிகிட்சை அளிக்கப்பட்டது.

23-03-2020 அன்று செல்வி. ஆனந்த செல்விக்கு கண்ணில் அடிபட்டதால் பெஜான்சிங் கண் மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருந்து வாங்கப்பட்டது.
தொடர்ந்து 31-03-2020, 13-04-2020 ஆகிய நாட்களில் பெஜான்சிங் கண் மருத்துவமனைக்கு அழைத்து சென்று தொடர் சிகிச்சை கொடுக்கப்பட்டது.

12-01-2020 அன்று செல்வி. மாலாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் பரசேரியில் உள்ள விஜயா நர்சிங் ஹோமில் காண்பித்து மருத்துவரின் ஆலோசனைபடி ஸ்கேன் எடுக்கப்பட்டது.

20-10-2020 அன்று செல்வி. மாலாவுக்கு புற்றுநோய் பாதிப்பு இருப்பதாக கண்டறியப்பட்டதால் நெய்யூர் ICC மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. தொடர்ந்து 03-11-2020 அன்று நெய்யூர் ICC மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருந்து வாங்கப்பட்டது.

## ஸ்பாஸ்டி தொழிற் பயிற்சி மையம்:

4-01-2020, 20-01-2020, 18-02-2020 ஆகிய நாட்களில் செல்வன். கஸ்தூரி ராஜா, செல்வன். மணவாளன் இருவரையும் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் மனநலபிரிவில் காண்பித்து மருத்துவரின் ஆலோசனைபடி மருந்து வாங்கப்பட்டது.

17-03-2020 அன்று திரு. மணி, செல்வன். நாகராஜன், இருவரையும் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருந்து வாங்கப்பட்டது.

17-08-2020 அன்று செல்வன். விஜயகுமாருக்கு காலில் கம்பி குத்தியதால் CBH-க்கு அழைத்துசென்று TT மருந்து போடப்பட்டது.

08-12-2020, 09-12-2020, 10-12-2020 ஆகிய நாட்களில் செல்வன். வேல் முருகனுக்கு கால் விரலில் புண் இருந்ததால் CBH-க்கு அழைத்து சென்று மருந்து வாங்கப்பட்டது.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:



01-01-2020 அன்று திருமதி. பூமாலை அவர்களுக்கு உடல்நலக்குறைவால் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டது. 06-02-2020 அன்று கண்வலி காரணமாக திருமதி. லெட்சுமி அவர்களையும்,

25-02-2020 அன்று திருமதி. தனம் அவர்களுக்கு உடல்நல குறைவால் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டது.

03-03-2020 அன்று திருமதி. காசிதங்கம் அவர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை உள்நோயாளிகள் பிரிவில் சேர்க்கப்பட்டு மருத்துவ ஆலோசனைப்படி சிகிட்சை அளிக்கப்பட்டது.

06-07-2020 அன்று திருமதி. மணியம்மா அவர்களுக்கு உடல்நலகுறைவால் இடலாக்குடி உகாசேவா மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ ஆலோசனைபடி சிகிட்சை அளிக்கப்பட்டது.

07-10-2020 அன்று திருமதி. மணியம்மா அவர்களுக்கு சுகவீனம் ஏற்பட்டதால் Dr. Antony Joe அவர்களை சந்தித்து மருத்துவ ஆலோசனைபடி சிகிட்சை அளிக்கப்பட்டது.

13-11-2020 அன்று செல்வி. ரமணி அவர்களுக்கு காலில் வீக்கம் ஏற்பட்டதால் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டது.

05-12-2020 அன்று திருமதி. மணியம்மா அவர்களுக்கு உடல்நிலை மோசமாக இருந்த காரணத்தால் Dr. Mary Vijaya அவர்களின் ஆலோசனைபடி சிகிட்சை அளிக்கப்பட்டது.

மேலும் கோட்டார் ஆயூர்வேதா மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மாதத்தில் இருமுறை சென்று முதியோர்களுக்கு கொரோனா தடுப்பு மருந்துகள் மற்றும் எண்ணெய் வாங்கப்பட்டு வருகின்றது. தினசரி மாத்திரைகள் எடுக்கும் முதியோர்களுக்கு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் இருந்து மாத மருந்துகள் வாங்கப்படுகின்றது.

**<u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:</u>**

16-01-2020 அன்று வெள்ளிச்சந்தை அரசு ஆரம்ப சுகாதார மருத்துவ மனைக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த திருமதி. கலையரசியையும்,

திருமதி. ராணிலெட்டையும்,

04-02-2020 அன்று செல்வி. முத்தம்மாள் என்பவருக்கு நெஞ்சு வலியின்
காரணமாக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கும், 11-02-2020 அன்று வெள்ளிச்சந்தை அரசு ஆயூர் வேதா மருத்துவமனைக்கு செல்வி. அன்பரசி கால்
மூட்டு வலிக்கும்,

07-03-2020, 13-03-2020, 20-03-2020 ஆகிய நாட்கள் திருமதி. லீலா, திருமதி. கலையரசி, திருமதி. முரளி லீலா தோல் வியாதிக்காக வெள்ளிச்சந்தை அரசு சுகாதார மருத்துவமனைக்கும்,

25-04-2020 அன்று திருமதி. பிரேமா ராதாகிருஷ்ணன் என்பவருக்கு காய்ச்சல் காரணமாக வெள்ளிச்சந்தை அரசு மருத்துவமனைக்கும்,

30-07-2020 அன்று திருமதி. சரஸ்வதி ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கும்,



26-09-20 அன்று செல்வி. மஞ்சு என்பவருக்கு கைவிரல்களில் புண்ணும், வாய் புண்ணுமாக இருந்ததால் வெள்ளிச்சந்தை அரசு மருத்துவமனைக்கும்,

02-10-20 அன்று செல்வி. மஞ்சு என்பவரின் கைவிரலில் இருந்த இரும்பு வளையத்தை அகற்றுவதற்காக நாகர்கோவில் Dr. எட்வின் எம்பிரர் அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவரது பரிந்துரையின் பேரில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு மயக்க நிலையில் கைவிரலில் இருந்த இரும்பு வளையத்தை அகற்றப்பட்டது.

23-10-2020 அன்று திருமதி. சித்ராவை தடுப்பூசி போடுவதற்காக வெள்ளிச்சந்தை அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கும், 30-10-20 அன்று திருமதி. கலா ராணிக்கு நெஞ்சுவலிக்கும்,

28-11-2020 அன்று செல்வி. அன்பரசிக்கு காலில் புண்ணிற்கும், 14-12-2020 அன்று திருமதி. கலாராணியை வயிற்று வலிக்கும் வெள்ளிச்சந்தை அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்று மருந்து, மாத்திரைகள் வாங்கி கொடுக்கப்பட்டது.

**ஆதரவற்றவர்களை சந்தித்தல்:**

இந்த ஆண்டு திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்களால் சந்திக்கப்பட்ட ஆதரவற்றவர்கள் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



திட்ட அலுவலர் செல்வி. அவர்களால் இந்த ஆண்டு 47 ஆதரவற்றவர்களை சந்தித்து பேசப்பட்டுள்ளது.

துணை திட்ட அலுவலர் திருமதி. விஜி அவர்களால் இந்த ஆண்டு 8 ஆதரவற்றவர்களை சந்தித்து பேசப்பட்டுள்ளது.



துணை திட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீ கலா அவர்களால் இந்த ஆண்டு 7 ஆதரவற்றவர்களை சந்தித்து பேசப்பட்டுள்ளது.

**இதர பணிகள்:**

கொரோனா நோய் பரவல் காரணமாக முழு ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டதால் கடைகள் திறக்கவில்லை. ஹோட்டல்கள் செயல்படாததால் சாலையில் சுற்றித்திரிந்து ஹோட்டலில் வேஸ்ட் எடுத்து தின்று வாழ்ந்து வந்த மனநோயாளிகளுக்கு உணவு கிடைக்காமல் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு நமது நிறுவனம் வழியாக உணவு, தண்ணீர் வழங்கப்பட்டது. 25-03-2020 முதல் 16-05-2020 வரை தினமும் 110 மனநோயாளிகளுக்கு மதிய உணவு, தண்ணீர் கொடுத்து உதவி செய்யப்பட்டது.

தினமும் உணவுகள் கொடுக்க செல்லும் போது Rev. Fr. பீட்டர் ஆனந் (**‘கார்டு’** நிறுவனத்தின் நிர்வாக குழு உறுப்பினர்) அவர்கள் கூடவே சென்று உணவுகள் வழங்க உதவி செய்தார்கள்.









கொரோனா ஊரடங்கின் போது வேலையில்லாமல் வறுமையில் தவித்த

ஊனமுற்ற நபர்களின் குடும்பங்களுக்கு மாவட்ட ஊனமுற்றோர் நல அலுவலரின் பரிந்துரையின் படி 25 ஊனமுற்றோரின் குடும்பங்களுக்கு அரிசி, மளிகை பொருள்கள் மற்றும் மாஸ்க் ஆகியவை நமது நிறுவனம் சார்பில் கொடுத்து உதவி செய்யப்பட்டது.

கொரோனா ஊரடங்கின் போது உணவுக்கு அரிசி இல்லாமல் சிரமப்பட்ட நித்திரவிளையில் செயல்பட்டு வரும் முதியோர் இல்லத்திற்கு நமது நிறுவனம் சார்பில் அரிசி கொடுத்து உதவி செய்யப்பட்டது.

**<u>மருத்துவ முகாம் நடத்துதல்:</u>**

02-03-2020 அன்று முட்டம் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் ICTC கவுன்சிலர் திருமதி. ஜெயந்தி அவர்கள் தலைமையில் அன்பாலயா இல்ல பயனாளிகளுக்கு HIV பரிசோதனை செய்யப்பட்டது.






28-04-2020 அன்று வெள்ளிச்சந்தை அரசு ஆயூர் வேதா மருத்துவமனை சார்பாக அன்பாலயா இல்ல பயனாளிகளுக்கு கபசுர கசாயம் 5 நாட்கள் தொடர்ந்து வழங்கினார்கள்.

16-12-2020 அன்று நாகர்கோவில் கன்கார்டியா செமினரியில் வைத்து நமது நிறுவன இயக்குனர் எழுதிய மனவளர்ச்சி குறை, மனநோய், வலிப்பு நோய் - பராமரிப்பும், பாதுகாப்பும் பற்றிய புத்தகங்கள் வெளியிடப்பட்டது. இந்த புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளப்பட்டது.









## பிற நிறுவனங்களை பார்வையிடுதல்:

09-01-2020 அன்று அழகிய மண்டபத்தில் விண்ணரசு வித்யா கேந்திரா மையம் பார்வையிடப்பட்டது. 09-01-2020 அன்று மாத்தார் முதியோர் இல்லத்தை பார்வையிடப்பட்டது.

## நமது சிறப்பு இல்லங்களை பார்வையிட வந்த அரசு அலுவலர்கள்:

10-07-2020 அன்று மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. சரோஜினி அவர்கள் நமது நிறுவனத்தின் கீழ் செயல்படும் ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி

மையம் - புளியடி, மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழில்பயிற்சி மையம் - திருப்பதிசாரம், நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம், அன்பாலயா மனநோயாளிகள் இல்லம் - வெள்ளிச்சந்தை சிறப்பு இல்லங்களை பார்வையிட வந்துள்ளார்கள்.

29-12-2020 அன்று சுகாதாரத்துறை ஆய்வாளர் திரு. ராஜா அவர்கள் எமது முதியோர் இல்லத்தை பார்வையிட்டு சென்றார்கள்.

மேலும் மாதத்திற்கு இரண்டு முறை தொல்லவிளை ஆரம்ப சுகாதார நிலைய D.B.C பணியாளர்கள் வந்து எமது முதியோர் இல்லத்தை பார்வையிட்டு செல்கின்றனர்.

## 5. செய்து முடிக்காத பணிகள்:

### 1. மருத்துவ முகாம் நடத்துதல்:

Corona ஊரடங்கின் காரணமாக அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் மருத்துவ முகாம் நடத்த முடியவில்லை.

## 6. திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருந்தவர்கள்:

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், விடுதி பணியாளர்கள், உதவி பணியாளர்கள், நிர்வாக பணியாளர்கள் ஆகியோர்கள் உதவியாக இருந்தார்கள்.

## 7. எதிர்கால திட்டங்கள்:

1. ஆதரவற்றவர்களை சந்தித்தல்
2. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்.
3. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்.
4. ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல்.
5. நன்கொடையாளர்களை சந்தித்தல்.
6. மருத்துவ முகாம்கள் நடத்துதல்.
7. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்
8. CASE HISTORY எழுதுதல்.
9. நன்கொடைகள் வசூலித்தல்.
10. விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்.
11. விழாக்கள் கொண்டாடுதல்.

12. பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

13. பணியாளர்கள் கூட்டங்கள் நடத்துதல்.

14. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

திருப்பதிசாரம்,
04-02-2021. திட்ட அலுவலர்.

திட்ட இயக்குனர்.